என்று கருதப்பெற்று திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. வீடு கள் தேவையானவர்கள் பதிவு செய்யும் பட்சத்தில், வீட்டுத் தேவை அதிகம் இருக்கின்ற வகையில் விண்ணப்பங்கள் பெறு கின்ற பட்சத்தில் நிச்சயமாக இந்தத்திட்டம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலங்களை கையகப்படுத்துகின்றபோது தனியார் காலி நிலங்களாக இருந்தாலும், பழைய கட்டிடங்களை இடித்து கட்டுவதாக இருந்தாலும் அதையெல்லாம் ஹவுசிங் போர்டு மூலம் தான் அரசு எடுக்கவேண்டுமென்று ஏதாவது ஒரு தனித் திட்டம் இருக்கிறதா ? அப்படி ஹவுசிங் போர்டு எடுக்காவிட்டால் ரியல் எஸ்டேட்டுகாரர்கள் அதை கையகப்படுத்தி, தனியார் களின் பழைய கட்டிடங்களை வாங்கி அதிக விலைக்கு பல்வேறு நகரங்களில் இப்போது கட்டிக் கொடுத்துக்கொண்டிருக்கிறார் கள். அதன் விலை அரசின் விலையை விட 2, 3 மடங்கு அதிகமாக இருப்பதால் தனியார் நிலங்களை அரசு கையகப்படுத்தி குறைந்த விலையில் பல்வேறு நகரங்களில் வழங்க, எல்லா மக்களுக்கும் வீடு கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் களை இது சம்பந்தமாக தனிக் கேள்வி போடுமாறு அறிவுறுத்து கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 235, திரு. ஜி. பழனிசாமி இருக்கையில் இல்லை.

236 திரு. சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

236—

ஆதிதிராவிட மக்களுக்கு திருமண மண்டபம்.

*4730 திரு. சிங்கை கோவிந்தராசு :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதிதிராவிட மக்களுக்கு ஒவ்வொரு தொகுதியிலும் திருமண மண்டபம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

TRUTH ALONE TRIUMPHS

1992 மார்ச் 16]

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆதிதிராவிடர் மக்களுக்கு ஒவ்வொரு தொகுதியிலும் திருமண மண்டபம் அதாவது சமுதாயக் கூடம், கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை. இதுவரை மொத்தம் 140 சமுதாயக் கூடங்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. சமுதாயக் கூடங்கள் தேவைப்படும் இடங்களுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அனுப்பும் முன்மொழிவுகளைப் பரிசீலித்து, அரசின் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு, இச்சமுதாயக் கூடங்கள் (திருமண மண்டபங்கள்) 'தாட்கோ' நிறுவனம் மூலம் கட்ட ஆணையிடப்படுகின்றன.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய முன் அனுமதியோடு என் நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கோவை மாவட்டத்தில் உயிர்த் தண்ணீர்க் கொடுத்து தென்னை மரங்களை வாழவைத்த எங்களுடைய குடும்பத் தெய்வம், தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுக்கு கோவை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், விவசாயிகள், சார்பாக எங்களுடைய உளமார்ந்த நன்றியை காணிக்கையாக்கி..(மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. சிங்கை கோவிந்தராசு : மன்னிக்க வேண்டும் கேள்விக்கு வருகிறேன். ஆதிதிராவிட மக்கள் தாங்கள் வாழ்கின்ற இடங்களில் மிக குறுகிய இடங்களில், மிக வசதி குறைவான வகையில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு குடியிருப்புகள் என்று இருப்பது மிக மிக அரிது. அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய இல்லத் திருமணங்களை, அல்லது காதணி விழா அல்லது அவர்களுடைய மனைச்சீர் போன்ற நிகழ்ச்சிகள் போன்றவற்றை 500 ரூபாய், 1,000 ரூபாய் கொடுத்து மண்டபம் பிடித்து அந்த விசேஷ நிகழ்ச்சிகளை நடத்த இயலாது. அப்படிப்பட்ட சமுதாயத்தினரை இல்லை என்ற சொல்லுக்கே இடம் அளிக்காத நம்முடைய ஒப்பற்றத் தலைவி, தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முன்னேற்றி வருகின்ற பல்வேறு திட்டங்களை கொண்டு வந்திருக்கிறார்கள். அதோடு இணைத்து இவர்களுக்கு தொகுதிகள்

முழுவதிலும் கடுமையான நிதிநிலை இருந்தாலும் கம்யூனிட்டி ஹால் என்று சொல்லப்படுகின்ற அந்த அமைப்புகளைக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டில் 4 இடங்களில் சமுதாயக் கூடங்கள் ரூ. 16.01 இலட்சத்தில் கட்ட ஆணையிட்டிருக்கிறார்கள். குறிப்பாக, கோயம்புத்தூர் மாவட்டத்தில் வெள்ளலூர் என்ற கிராமத்தில் ரூ. 3.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சூ. சே. இராஜமன்னார்.

திரு. சூ. சே. இராஜமன்னார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஆனால் நகர்ப்புறத்தைச் சார்ந்த அரிஜன மக்கள்தான் இந்தத் திட்டத்தின்கீழ் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்படுகிறார்களா, இந்தத் திட்டம் நகர்ப்புறத்தில் இல்லாததால் பாதிக்கப்படுகிறார்களா என்று சொல்லுங்கள்.

திரு. சூ. சே. இராஜமன்னார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறத்தில் இந்தத் திட்டம் இல்லை. ஆகவே, நகர்ப்புறத்தில் வாழும் அரிஜன மக்கள், தங்கள் இல்லத் திருமணங்களை மிகப் பெரிய அளவில் நடத்தவேண்டுமென்று திருமண மண்டபங்களை நாடிச் சென்றால், நகர்ப்புறத்தில் பிற ஜாதியைச் சேர்ந்தவர்களே திருமண மண்டபங்களை நட்த்தி வருவதால், அவர்கள், குறிப்பிட்ட அந்தத் தேதியில் பிற ஜாதியினருக்கே அந்தத் திருமண மண்டபங்களை வாடகைக்கு விடுகிறார்களேயொழிய அரிஜன மக்கள் கேட்கும் பொழுது எப்படியோ தவிர்த்து விடுகிறார்கள். ஆகவே, நகர்ப்புறங்களில் பெரிய அளவில், சிறப்பான முறையில் அரிஜன மக்கள் தங்கள் வீட்டுத் திருமணங்களை நடத்துவதற்கு, வாலண்டரி ஏஜென்சீஸ், அரிஜன சங்கங்கள் போன்ற சங்கங்கள் திருமண மண்டபங்களைக் கட்ட முன்வந்தால் அவர்களுக்கு நிலங்களை லீசுக்கு கொடுக்கவோ பண உதவி செய்யவோ அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1992 மார்ச் 16]

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலங்களை வீசுக்கோ மற்றவற்றுக்கோ கொடுப்பதற்கு வருவாய்த்துறைதான் பொறுப்பு ஏற்க வேண்டு மென்று கருதுகிறேன். கிராமப்புற மக்களின் கோரிக்கையை ஏற்றுத்தான் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். நகர்ப்புற மக்களும் கோரிக்கை கொடுத்தால் அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20—ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே கூட, விஞ்ஞானம் வெகுவாக வளர்ந்திருக்கிற இந்த காலக் கட்டத்திலே கூட மிகப் பெரிய உயர் அதிகாரிகளாக இருந்தாலும்கூட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நகர்ப்புறத்திலே வீடு கிடைப்பது என்பது மிகவும் பிரச்சினையாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையிலே அவர்கள் திருமண மண்டபங்களைப் பெற முடிவதில்லை. எனவே தாழ்த்தப்பட்ட மக்களின் உற்ற தோழராக இருந்துகொண்டிருக்கிற நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியிலே, வட்ட அளவிலாவது, ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு சமுதாயக் கூடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி அளவிலேயே பரிசீலிப்பதற்கு ாத்தியக்கூறு இல்லை. வட்ட அளவில் என்று சொன்னால் செலவு அதிகமாகும். நிதிநிலைமை மிக மோசமான நிலையிலே இருக்கிறது. கோரிக்கைகள் வருகின்ற பகுதிகளுக்கு, அவற்றைப் பரிசீலித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 237. திரு. கே. செல்வராஜ். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

237—

பால் விநியோக மையங்களில் பெண்களை நியமித்தல்.

*5025—

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.